தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.07.2013**

**19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் ஜூலை 19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இது குறித்து ஆட்சியர் லி. சித்ரசேனன் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வரும் வெள்ளிக்கிழமை ஜூலை 19-ம் தேதி காலை 10.30 மணிக்கு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத் துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு மனு அளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**ராகி பயிர் நாற்று நடும் பணியில் வேளாண் கல்லூரி மாணவர்**

காரைக்கால் வேளாண் கல்லூரி மாணவ, மாணவிகள் சனிக்கிழமை ராகி பயிர் நாற்று நடும் பணியில் கல்லூரிப் பேராசிரியர்கள் வழிகாட்டுதல்படி ஈடுபட்டனர்.

காரைக்கால் மாவட்டம், நெடுங்காடு அருகே பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இக்கல்லூரியில் 3-ம் ஆண்டு வேளாண் இளங்கலை படிக்கும் மாணவ, மாணவிகள் உழவியல் துறை சார்பில் ராகி பயிர் செய்து வருகின்றனர்.

கல்லூரி வளாகத்தில் உள்ள சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் 102 நாள் பயிரான ராகி விதைத்துள்ளனர். இப்பயிர் நாற்று நடும் பணி சனிக்கிழமை நடைபெற்றது.

முற்றிலும் மாணவ, மாணவிகளே விதைப்பது முதல் பயிர் பராமரிப்பு, அறுவடை வரை செய்ய வேண்டும். கல்லூரி முதல்வர் செல்லமுத்து அறிவுறுத்தல்படி, உழவியல் துறை உதவிப் பேராசிரியர்கள் வி. ஸ்ரீதேவி, வி. கருணாகரன் வழிகாட்டுதல்படி மாணவ, மாணவிகள் விவசாயப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து உதவிப் பேராசிரியர்கள் கூறியது:

வேளாண் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள் நேரடி களப் பணியில் ஈடுபடுவதன் மூலம் கூடுதல் அனுபவங்களைப் பெறுகிறார்கள். இதன்படி, கல்லூரியில் 3-ம் ஆண்டு பயிலும் இளங்கலை மாணவர்கள் 5 பேரும், மாணவிகள் 31 பேரும் ஆக 36 பேர் ராகி பயிர் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, நாற்று நடும் பணி மேற்கொள்ளப்பட்டது என்றனர்.

**பருவ மழையின்றி கருகும் தென்னை மரங்கள்**

ஆண்டிபட்டி பகுதியில் பருவமழை பொய்த்ததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. இதனால் தென்னை மற்றும் பல்வேறு விவசாயப் பயிர் வகைகள் கருகி வருவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

ஆண்டிபட்டி பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை, வாழை, முருங்கை மற்றும் பல்வேறு காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

குளம் மற்றும் கிணற்று நீர் மூலம் பாசனம் நடைபெற்று வருகிறது. கடந்த சில மாதங்களாக பருவமழை பொய்த்ததால் குளம் மற்றும் ஆறுகளில் நீர்வரத்து இல்லை. மேலும் குளம் மற்றும் ஓடைகளில் சட்ட விரோதமாக மணல் அள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஆறுகளுக்கு வரக்கூடிய நீர் திருப்பி விடப்பட்டு நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து விட்டது.

பருவமழை குறைந்த காலங்களில் குளம் மற்றும் குட்டைகளை தூர்வார எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், குளங்களில் மண் தேங்கி நீர் தேக்கும் அளவும் குறைந்து வருகிறது.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதால், கிணறுகளின் நீர்மட்டமும் குறைந்து, அதன் மூலம் நடக்கும் பாசனப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஆண்டிபட்டி பகுதிகளில் ஏராளமான தென்னை மரங்கள், பப்பாளி மரங்கள் நீரின்றி கருகி வருகின்றன.

இப்பகுதியைச் சேர்ந்த ராமராஜ் கூறியது:

கிணற்று நீர் மூலம் விவசாயம் செய்து வந்தோம். தற்போது பருவமழை பொய்த்ததால் கிணற்றின் நீர்மட்டமும் குறைந்து விட்டது.

இதனால் காய்கறி விவசாயத்தில் இருந்து தென்னை விவசாயத்துக்கு மாறினோம்.

தற்போது தென்னைக்குக்கூட நீர் விட முடியாத அளவுக்கு வறட்சி ஏற்பட்டுள்ளதால் மரங்கள் கருகி வருகின்றன என்றார்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்**

சிவகாசி சபையர் மெட்ரிக் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

பள்ளி வளாகத்தில் தொடங்கிய இந்த ஊர்வலத்தை தாளாளர் ஞானசேகரன் தொடங்கி வைத்தார். முன்னதாக கல்லூரி முதல்வர் செல்வக்குமார், மழைநீர்

சேமிப்பின் அவசியம் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பேசினார்.

ஊர்வலம் அய்யனார் காலனியில் பிரதான தெருவழியே சென்று, மீண்டும் பள்ளியை அடைந்தது.

மாணவர்கள் பொதுமக்களிடையே மழைநீர் சேமிப்பதால் ஏற்படும் பயன்கள் குறித்த துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

**கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல்போக சாகுபடிக்காக ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

முதல்போக சாகுபடிக்காக கிருஷ்ணகிரி அணையிலிருந்து ஜூலை 14ஆம் தேதியிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் தமிழக முதல்வர் அறிவித்தார்.

இதையடுத்து, கிருஷ்ணகிரி அணையிலிருந்து வலது, இடதுபுறக் கால்வாய்களில் அமைச்சர் கே.பி.முனுசாமி ஞாயிற்றுக்கிழமை தண்ணீரை திறந்து விட்டார்.

52 அடி கொள்ளளவு கொண்ட கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் 43.50 அடியாக உள்ளது. அணை இடது புறக்கால்வாயில் நொடிக்கு 80 கன அடியும், வலதுபுறக் கால்வாயில் நொடிக்கு 75 கன அடி என மொத்தம் 155 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்தக் கால்வாய்கள், 26 சிறுபாசன ஏரிகள் மூலம் திறந்துவிடப்படும் தண்ணீர் மூலம் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், செப்ட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பர்அள்ளி, பையூர் ஆகிய 16 ஊராட்சிகளில் உள்ள 9012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

மேலும், இந்த தண்ணீர் 11.12.2013 வரை தொடர்ந்து 150 நாள்களுக்கு பாசனத்துக்காக திறந்துவிடும். அதைத்தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்படும் நாள்கள் நீடிக்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அமைச்சர் கே.பி.முனுசாமி கூறியது:

தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில், கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெற வேண்டும். அதேபோல, நீர் பங்கீட்டுப் பணிகளில் பொதுப் பணித் துறையினருக்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் சி.பிரகாசம்,  எம்எல்ஏக்கள் மனோரஞ்சிதம் நாகராஜ், கே.இ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் தலைவர் கே.அசோக்குமார், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் ஜகநாதன், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கோவிந்தராஜ், ஜமுனா கிருஷ்ணன், நகர்மன்றத் தலைவர் கே.ஆர்.சி.தங்கமுத்து, உதவி செயற்பொறியாளர் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை 13 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் தென்மேற்குப் பருவ மழையால் அங்குள்ள கபினி அணை நிரம்பி, அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதனால், கடந்த மாதம் 25ஆம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், சனிக்கிழமை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 10,142 அடியாகக் குறைந்தது. ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 13,683 கன அடியாக அதிகரித்தது.

உபரி நீர் தொடர்ந்து மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67.56 அடியாக இருந்தது.

குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் இருப்பு 30.64 டி.எம்.சியாக இருந்தது.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 68.01 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 68.01 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 16,136 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தல்**

ஒரத்தநாட்டில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய மாநாடு ஒரத்தநாட்டில் அண்மையில் நடைப்பெற்றது. மாவட்ட குழு உறுப்பினர் துரை மாணிக்கம் தலைமை வகித்தார். சீனிமுருகையன், பழனிவேல் முன்னிலை வகித்தனர். மகேந்திரன் வரவேற்றார். மாநாட்டை விவசாய சங்க மாநிலக்குழு உறுப்பினர் பாஸ்கர் தொடக்கி வைத்தார். ஒன்றிய செயலர் கருணாநிதி ஆண்டறிக்கை வாசித்தார்.

மீத்தேன் வாயு திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். காவிரி மேலாண்மை வாரியத்தை விரைந்து அமைத்து, தமிழகத்துக்கு கொடுக்க வேண்டிய நீரை பெற்றுத் தர வேண்டும். நெல்லுக்கு கட்டுப்படி விலையாக குவிண்டாலுக்கு ரூ. 2500 பெற்றுத் தர வேண்டும்.

ஒரத்தநாட்டில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம் உடனே திறக்க வேண்டும். வேதபுரி வாய்க்காலை தூர்வாரி, சீரமைக்க வேண்டும். நீர் நிலைகளை பாதுகாக்க ஏரி, குளங்களை ஆழப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. புதிய தலைவராக மகேந்திரன், செயலராக கருணாநிதி, பொருளாளராக பழனிவேல் மற்றும் உறுப்பினர்கள் 23 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைவர் பாலசுந்தரம், மாவட்ட செயலர் பன்னீர்செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலர் துரைசண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை 13 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் தென்மேற்குப் பருவ மழையால் அங்குள்ள கபினி அணை நிரம்பி, அணையின் பாதுகாப்பு கருதி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதனால், கடந்த ஜூன் 25ஆம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்நிலையில், சனிக்கிழமை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 10,142 அடியாகக் குறைந்தது. ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 13,683 கன அடியாக அதிகரித்தது.

உபரி நீர் தொடர்ந்து மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67.56 அடியாக இருந்தது. குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் இருப்பு 30.64 டி.எம்.சியாக இருந்தது.

**வைகை அணையில் இருந்து இன்று தண்ணீர் திறப்பு**



வைகை அணையில் இருந்து திங்கள்கிழமை முதல் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட உத்தரவு: திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள பெரியாறு பாசனப் பகுதியின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

அவர்களது கோரிக்கையை ஏற்று, வைகை அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்காக திங்கள்கிழமை (ஜூலை 15) முதல் முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன்.

இதனால் திண்டுக்கல் மாவட்டத்தில் ஆயிரத்து 793 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டத்தில் 43 ஆயிரத்து 248 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.07.2013**

## தேனி உழவர் சந்தையில் சீரான விலையில் காய்கறிகள்

தேனி: உழவர் சந்தையில் அதிகரித்திருந்த காய்கறி விலை, சற்று குறைந்த நிலையில் சீராக அதே விலைகளில் நீடிக்கிறது.

தேனி உழவர்சந்தையில், காய்கறி விலைகள் அதிகரித்து காணப்பட்டன. இந்நிலையில் கடந்த இரண்டு வாரமாக விலைகள் சிறிதளவு மட்டுமே குறைந்த நிலையில் சீராக காணப்படுகின்றன. நேற்று உழவர் சந்தைக்கு 74 விவசாயிகள்55 வகையான, 35 ஆயிரத்து 977 கிலோ காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். இதன் விலை 7 லட்சத்து 92 ஆயிரத்து 595 ரூபாய் ஆகும். 5,036 பயனாளிகள் வந்து காய்கறிகளை வாங்கிச் சென்றனர்.நேற்று, சந்தையில் காய்கறிகளின் விலை நிலவரம் கிலோவிற்கு ரூபாயில்:கத்தரிக்காய்- 20, தக்காளி- 26, வெண்டைக்காய்- 26, அவரைக்காய்- 26, கொத்தவரைக்காய்- 14, சுரைக்காய்- 7, புடலங்காய்- 15, பாகற்காய்- 25, பீர்க்கு- 20, முருங்கைக்காய்- 10, பூசணிக்காய்- 12, பச்சைமிளகாய்- 36, தேங்காய்- 8, பீட்ரூட்- 15, நூக்கல்- 20, முள்ளங்கி- 10, பட்டர்பீன்ஸ்- 60, சோயாபீன்ஸ்- 60, முட்டைக்கோஸ்- 26, காரட்- 30, டர்னிப்- 16, சவ்சவ்- 18, காலிபிளவர்- 15, இஞ்சி- 200, பூண்டு- 80, உருளைக்கிழங்கு- 26, சேனைக்கிழங்கு- 25, கருவேப்பிலை- 30, மல்லித்தழை- 18, புதினா- 25, சின்னவெங்காயம்- 35, பெல்லாரி- 30, கீரைவகைகள்- 5, எலுமிச்சை- 40, மாம்பழம்- 30, வாழை- 10.

## உழவு பணி துவங்க முடியாமல் தவிப்பு

திருவாடானை:மழை பெய்யாததால் திருவாடானை பகுதியில் உழவு பணியை தொடரமுடியாமல் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.திருவாடானை தாலுகாவில் ஆடிபட்டம் தேடி விதை என்ற பழமொழிக்கு ஏற்ப விவசாயம் செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக காலம் தாழ்த்திய மழையால் ஆகஸ்ட் மாதம் துவங்கவேண்டிய பணிகள் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விதைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. தற்போது முதல் உழவு பணியை துவங்கியிருக்க வேண்டிய நிலையில், மழை இல்லாததால் பணியை தொடரமுடியாமல் உள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "ஆடி மாதத்தில் விதைப்பது நல்லது என்பதால் ஆடி பெருக்கு அன்று நிலங்களில் விதைப்பு பெயரளவிற்கு நடக்கும். பின்பு மழை பெய்தவுடன் முறையான விதைப்பு நடைபெறும்' என்றனர். விவசாய பணிகள் துவங்குவதற்கு மழை வேண்டி கோயில்களில் சிறப்பு பூஜைகளும் நடந்து வருகிறது.

### கருகும் வெற்றிலை தொழில் விவசாயிகள் கவலை

கீழக்கரை:ராமநாதபுரம் அருகே தண்ணீரின்றி வெற்றிலை கருகி வருகிறது. விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பெரியபட்டினம், முத்துபேட்டை, புதுமடம், தங்கச்சி மடம், ஆற்றாங்கரை ஆகிய பகுதிகளில் விளையும் வெற்றிலை ருசி மிகுந்தது. தமிழகம் மட்டுமின்றி, வெளிமாநிலங்களிலும் நல்ல கிராக்கி உள்ளது. ஒரு ஏக்கரில் வெற்றிலைக்கொடி சாகுபடி செய்ய, ஒரு லட்ச ரூபாய்க்கும் மேல் செலவாகிறது. சில ஆண்டுகளாக போதிய மழை பெய்யவில்லை. கிணறுகள் வறண்டு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. வெற்றிலைகள் காய்ந்து சருகுகளே மிஞ்சுகின்றன.பெரியபட்டினம் வெற்றிலை விவசாயி அன்சாரி கூறுகையில், ""வெற்றிலைகளில் நோய் தாக்குதல் இல்லையெனில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இதன் பலனை அனுபவிக்க முடியும். விளைந்த வெற்றிலை பறிப்பதற்கு கூட, கூலிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. தற்போது கருப்பு வெற்றிலை கிலோ 100 ரூபாய், வெள்ளை வெற்றிலையை 110க்கு, மொத்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இந்த விலையால் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

### விவசாயிகள் சங்க மாநாடு

சத்திரப்பட்டி அருகே அய்யனாபுரத்தில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் 13வது தாலுகா மாநாடு மாவட்ட செயலாளர் ராமசாமி தலைமையில் நடந்தது.விவசாய

சங்க தலைவர் ராமசாமி முன்னிலையில் தேசிய கட்டுப்பாட்டு குழு தலைவர் நல்லக்கண்ணு பேசினார். அய்யனாபுரத்திற்கு தாமிரபரணி தண்ணீர் கிடைக்க வேண்டும்.சத்திரப்பட்டிலிருந்து வன்னியம்பட்டி செல்லும் ரோடுபோட வேண்டும்.விளை பொருட்களுக்கான உரிய விலை கிடைக்க வேண்டும்.சத்திரப்பட்டி,சேத்தூர் அரசு மருத்துவமனைகளிள் கூடுதலாக டாக்டர்கள் நியமனம் செய்ய வேண்டும் , என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில்லிங்கம் எம்.பி.,முன்னாள் எம்.பி.அழகிரிசாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துமாரி நன்றி கூறினார்.

## கே.ஆர்.பி., அணையில் இருந்து பாசனத்துக்கு நீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணையில் இருந்து, பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
கர்நாடகா மாநிலம் "நந்திஹில்ஸ்' மலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணையாற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி அருகே கே.ஆர்.பி., அணை கட்டப்பட்டுள்ளது.

இந்த அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை கொண்டு அணை பாசன பகுதியில் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அணையில் இருந்து உபரி நீர் திறந்து விடும் போது தென்பெண்ணையாற்றில் நெடுங்கல் அணையில் இருந்து கால்வாய் மூலம் பாரூர் ஏரியில் தண்ணீர் தேக்கிவைத்து பாசனத்துக்கு விடப்படுகிறது. இதனால் அணை பாசனம் மூலம், 19 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது.

கடந்தாண்டு மாவட்டத்தில் பருவ மழை பொய்து போனதால் கே.ஆர்.பி., அணைக்கு நீர்வரத்து முற்றிலும் தடைபட்டது. கிருஷ்ணகிரி நகரின் குடிநீர் தேவைக்கு மட்டுமே தண்ணீர் இருந்ததால் அணையில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவில்லை.

இந்த ஆண்டு தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதி மற்றும் கர்நாடகா மாநிலத்தில் பெய்த மழை காரணமாக ஜூன் மாத இறுதியில் அனையின் மொத்த நீர்மட்டமான, 52 அடியில், 41 அடியை தொட்டதால் கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல் போக சாகுபடிக்கு உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும்

என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

இதை தொடர்ந்து, கே.ஆர்.பி.,அணையில் இருந்து முதல் போக சாகுபடிக்கு நேற்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது நேற்று காலை நிலவரப்பட்டி அணையின் நீர்மட்டம், 43.50 அடியாகும்.

அணையில் இருந்து இடது புற கால்வாயில் வினாடிக்கு, 80 கன அடி தண்ணீரும், மற்றும் வலது புற கால்வாயில் வினாடிக்கு, 75 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஹல்லி, தளிஹள்ளி, பாலேகுளி, மாரிசெட்டிஹள்ளி, நாகோஜனஹல்லி, கால்வேஹள்ளி, ஜனப்பர் ஹல்லி, குண்டலப்பட்டி, மிட்டஹள்ளி, எர்ரஹள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பையூர் ஆகிய பஞ்சாயத்துகளில் உள்ள, 9 ஆயிரத்து, 12 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும்.

அணையின் நீர் இருப்பு மற்றும் எதிர்வரும் பருவமழை, கெலவரப்பள்ளி அணையிலுள்ள இருப்பு நீரின் அளவை கொண்டு, 150 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நிர்ணயித்த நாட்களுக்கு பின எக்காரணம் கொண்டும் காலவரை நீட்டித்து தண்ணீர் வழங்கப்படமாட்டாது.

விவசாயிகள் நீர்பங்கீட்டில் பொதுப்பணித்துறையினருடன் ஒத்துழைத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெரும் நோக்குடன் செயல்படுமாறு பொதுப்பணித்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நேற்று காலை அணையின் இடது மற்றும் வலது புறக் கால்வாய் மதகுகளை அமைச்சர் முனுசாமி மலர் தூவி திறந்து வைத்தார். கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் டி.ஆர்.ஓ., பிரகாசம், எம்.எல்.ஏ.,க்கள் கிருஷ்ணமூர்த்தி, மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அசோக்குமார், யூனியன் சேர்மேன்கள் கோவிந்தராஜ், ஜமுனா கிருஷ்ணன், நகராட்சி தலைவர் தங்கமுத்து, நகர கூட்டுறவு வங்கி தலைவர் கேசவன், மாவட்ட கவுன்சிலர் சித்ரா சுப்பிரமணியம் நீர்வள ஆதார அமைப்பின் செயற்பொறியாளர் ஜெகநாதன், கே.ஆர்.பி., அணை உதவி செயற்பொறியாளர் குமார், உதவி பொறியாளர் பிரபு,கே.ஆர்.பி., அணை பாசன விவசாயிகள் சங்க தலைவர் வீரபத்திர செட்டியார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சி நிவாரணத்தில் முறைகேடு விவசாயிகள் சங்கம் புகார்

ஈரோடு: வறட்சி நிவாரணம் வழங்கியதில் பாரபட்சமும், முறைகேடும் நடந்துள்ளதாக, விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் குற்றம் சாட்டி உள்ளனர். இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் அய்யாவு, செயலாளர் முனுசாமி ஆகியோர் கூறியதாவது:

தமிழக நிதி அமைச்சர் தலைமையில், வறட்சி நிவாரண உயர்மட்ட ஆய்வு குழு, ஈரோடு மாவட்டத்தை ஆய்வு செய்தது. அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க, உரிய ஏற்பாடு செய்வதாக குழு தலைவர் வாக்குறுதி அளித்தார். மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் மனு பெறப்பட்டது.

இதில், பெருந்துறை சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட பகுதி மற்றும் தாளவாடி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மட்டும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணம் வழங்கியதில் பாரபட்சமும், முறைகேடுகளும் நடந்துள்ளது. இதுதொடர்பாக எழுந்த புகாரின் அடிப்படையில், காஞ்சிகோவில் கிராம நிர்வாக அலுவலர் மீது நடவடிக்கை பாய்ந்துள்ளது.

மாவட்டம் முழுவதும் வறட்சி நிவாரணம் வழங்காமல், ஒரு பகுதி விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் வழங்குவது சரியானது அல்ல. வறட்சி நிவாரணத்தை எதிர்பார்த்து, விவசாயிகள் காத்து கிடக்கின்றனர். எனவே, மாவட்டம் முழுவதும் மீண்டும் முறையான ஆய்வு செய்து, அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சி நிவாரணத்தில் முறைகேட்டில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போர்க்கால அடிப்படையில் குடிநீர் பிரச்னையை தீர்க்கவும், விவசாயிகளின் கால்நடைகளுக்கு இலவசமாக தீவனம் வழங்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

## சொட்டு நீர் பாசனம் வசதி விண்ணப்பிக்க அழைப்பு

க.பரமத்தி: "சிறு, குறு விவசாயிகள், தோட்டக்கலைத்துறை மூலம், நூறு சதவீத மானியத்தில் சொட்டு நீர்பாசனம் அமைக்க விண்ணப்பிக்கலாம்' என, க.பரமத்தி

தோட்டக்கலை உதவி இயக்குனர் மணி தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
க.பரமத்தி பகுதியில் குறு விவசாயிகள், 2.50 ஏக்கர் வரை, சிறு விவசாயிகள், ஐந்து ஏக்கர் வரை, நூறு சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு, 12.50 ஏக்கர் வரை, 75 சதவீத மானியம் வழங்கப்படும்.
இத்திட்டத்தில் பயன்பெற சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு, பாஸ்போர்ட் ஃபோட்டோ, தாசில்தாரிடம் பெற்ற சான்று ஆகியவைகளுடன், க.பரமத்தி பஞ்., யூனியன் அலுவலகத்தில் உள்ள தோட்டக்கலை துறை அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு, 94433-08369, 80152-68283 ஆகிய எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும்.

### பாதித்த கரும்பு விவசாயிகளுக்கு ரூ. 25 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க மனு

விழுப்புரம்:வறட்சியால் பாதித்த விழுப்புரம் மாவட்ட கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க ராமமூர்த்தி எம்.எல்.ஏ., கோரிக்கை விடுத் துள்ளார்.
தமிழக முதல்வருக்கு அவர் அனுப்பிய மனு:
விழுப்புரம் மாவட்டம் தமிழகத்தில் அதிக சர்க்கரை ஆலைகள், கணிசமான கரும்பு விவசாயிகளையும் மற்றும் அதிகபட்ச கரும்பு சாகுபடியாகும் நிலப்பரப்பை கொண் டுள்ளது.
மாவட்டத்தில் வறட்சி, மின் வெட்டு மற்றும் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், கரும்பு பயிர் சாகுபடி பாதித்துள்ளது.
விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தமிழக முதல்வர் சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவித்ததை வரவேற்கிறோம்.
மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த கரும்பு சாகுபடி சுமார் 25 ஆயிரம் ஏக்கரை தாண்டும். நிவாரணம் கேட்டு கரும்பு விவசாயிகள் கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளனர். எனவே, விழுப்புரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு நஷ்ட ஈடாக ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாசன பகுதிகளில் நிலத்தடி நீர் சரிவு மேட்டூர் கால்வாய் திறக்க கோரிக்கை

மேட்டூர்: பாசனப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, குடிநீருக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக, கால்வாயில் நீர்திறக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேட்டூர் அணையில் இருந்து, மேட்டூர் கால்வாயில் ஆண்டுதோறும் ஆகஸ்ட், 1 முதல் டிசம்பர், 15வரை, 137 நாட்கள் வினாடிக்கு, 1,000 கனஅடி வீதம் மொத்தம், 9.608 டி.எம்.சி., நீர் திறக்கப்படும். நீரின் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டத்தில், 45,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

கடந்த ஆண்டு, மேட்டூர் அணை நீர்மட்டம் குறைவாக இருந்ததால், கால்வாயில் குறித்த நாளில் பாசனத்துக்கு நீர் திறக்கவில்லை. இதனால், கால்வாய் பாசன பகுதியில் நெல் சாகுபடி பாதித்தது. நடப்பாண்டில் வரும், 1ம் தேதி பாசனத்துக்கு நீர்திறக்க வேண்டும். அணை நீர்மட்டம், 67 அடியாக இருப்பதால் நீர்திறக்கப்படுமா? என்ற சந்தேகம் நிலவுகிறது.

கால்வாய் பாசன பகுதிகளில் நிலத்தடி நீர் குறைந்து, குடிநீருக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குடிநீர் பற்றாக்குறை போக்க, மேட்டூர் கால்வாயில் நீர்திறக்க வேண்டும், என மேட்டூர் மேற்கு கால்வாய் பாசன விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். மேற்கு கால்வாய் பாசன விவசாயிகள் சங்க செயலாளர் பழனிச்சாமி கூறியதாவது:

மேட்டூர் கால்வாய் வறண்டு கிடப்பதால், கால்வாய் பாசன பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. 400 அடிக்கு மேல் உள்ள போர்வெல்களில் தண்ணீர் இருந்த பாசன பகுதியில் தற்போது, 700 அடி வரை போர்வெல் போட வேண்டியுள்ளது. அப்படி போட்டாலும், குறைவான தண்ணீரே கிடைக்கிறது.

இதனை சாகுபடி பயன்படுத்த முடியாததால், பயிர்கள் பாதிக்கிறது. மேட்டூர் அணை நீர்மட்ட,ம் 67 அடியாக அதிகரித்துள்ளதால், கரையோர பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை போக்க கால்வாயில் நீர்திறக்க வேண்டும் என விவசாயிகள்

சங்கம் சார்பில் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளோம்.
இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணைக்கு தொடர்ந்து நீர் வரத்து

மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்ததால், கர்நாடகாவின் கபினி அணை நிரம்பியது. கபினியில் திறக்கப்பட்ட உபரி நீர், தொடர்ச்சியாக வருவதால் கடந்த, 25ம் தேதி, 2.8 டி.எம்.சி.,யாக இருந்த மேட்டூர் அணை நீர் இருப்பு மளமளவென அதிகரித்தது.
நேற்று, மேட்டூர் அணை நீர்மட்டம், 67.560 அடியாகவும், நீர் இருப்பு, 30.642 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. கடந்த, 20 நாளில் நீர்மட்டம, 52.5 அடியும், நீர் இருப்பு, 27 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. மேட்டூர் அணை மொத்த நீர் கொள்ளளவு, 93.470 டி.எம்.சி.,யாகும்.
தற்போது அணையில், 30.642 டி.எம்.சி., நீர் உள்ளது. நேற்று வினாடிக்கு, 13,683 கனஅடி நீர் வந்தது. அணைக்கு தொடர்ச்சியாக தண்ணீர் வருவதால், நீர்இருப்பு மேலும் அதிகரிக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

## மேட்டூர் அணையைத் திறக்கக் கூடிய காலம் எப்போது :ஆலோசனை கூற விவசாயிகள் தயார்

மேட்டூர் : மேட்டூர் அணை முழுவதும் நிரம்பினால், சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது குறித்து, வேளாண் துறையினர் முதற்கட்டமாக ஆலோசித்து வருகின்றனர். ஆனால், "எங்கள் கருத்தை அறிந்த பிறகே, தண்ணீர் திறக்க வேண்டும்' என, டெல்டா விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். டெல்டா மாவட்டங்களில், ஆண்டுதோறும் குறுவை சாகுபடிக்காக, மேட்டூர் அணையில் இருந்து, ஜூன், 12ம்தேதி தண்ணீர் திறக்கப்படும். கடந்த ஆண்டு, தண்ணீர் இருப்பு குறைவாக இருந்ததால், குறுவை சாகுபடிக்கு, தண்ணீர் திறக்கவில்லை.சலுகை: கடந்த ஆண்டை போல, இந்த ஆண்டும், குறுவை சாகுபடிக்கு, மேட்டூர் அணையில் இருந்து, தண்ணீர் திறக்கப்படவில்லை. அதே நேரம், நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி, சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 12 மணி நேரம் மும்முனை மின்சாரம், இலவச உரம், பாசனக்குழாய் உள்ளிட்ட சலுகைகளை, அரசு

அறிவித்துள்ளது. இதனால், பம்ப் மோட்டார் விவசாயிகள் மட்டும், குறுவை சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இச்சூழலில், கர்நாடகாவில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, அங்குள்ள அணைகளில் இருந்து வரும், உபரி நீர், மேட்டூர் அணைக்கு வருவது, சற்று அதிகரித்தது. ஆனால், இப்போது இல்லை. எனினும், 70 அடி அளவுக்கு இன்னமும் தண்ணீர் வரவில்லை. ஆலோசனை: தண்ணீர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில், விரைவில், மேட்டூர் அணை நிரம்பக் கூடிய வாய்ப்புள்ளது. எனவே, குறுவை சாகுபடிக்கு, தண்ணீர் திறப்பது குறித்து, வேளாண்துறை உயர் அதிகாரிகள், ஆலோசனை நடத்தி வருகின்றனர். ஆனால், தங்கள் கருத்தை அறிந்த பின்னரே, சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என, டெல்டா மாவட்ட விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து, டெல்டா மாவட்ட, விவசாயிகள் சங்க நிர்வாகி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டு, குறுவை, சம்பா சாகுபடி பாதித்ததால், விவசாயிகளின் வருமானம் பறிபோய் விட்டது. கூலித் தொழிலாளர்கள், வெளிமாநிலங்களில் வேலைக்கு சென்று, வருவாய் தேடிக் கொண்டனர். முதலாளியாக வாழ்ந்த விவசாயிகள், யாரிடமும் கைகட்டி நிற்கக் கூடாது என்பதால், இங்கேயே இருந்து விட்டனர். தற்போது, நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி, சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, விதை நெல்லை விற்று, பலர் குடும்பம் நடத்தி வருகின்றனர். அடுத்த சாகுபடிக்கு, தேவை யான விதை நெல்லோ, உரமோ, அவற்றை வாங்க பணமோ, பல விவசாயிகளிடம் இல்லை. இச்சூழ்நிலையில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, மேட்டூர் அணையில் இருந்து, தண்ணீர் திறந்து விட்டால், அது, விவசாயிகளுக்கு பயன்படாது. தண்ணீர் வீணாக கடலுக்கு செல்லும். எனவே, தண்ணீர் திறந்தால், சாகுபடிக்கு தேவையான உதவிகளை, வேளாண் துறையினர் வழங்க வேண்டும். தண்ணீர் திறப்பது குறித்து, விவசாயிகளிடம், முன்கூட்டியே கலந்து பேச வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார். மேட்டூர் அணை நீர், பல மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாக ஆகிவிட்டதாலும், காவிரி அணை நீர் பங்கீட்டில் இன்னமும் முறையான உடன்பாடு காணமுடியாத சூழ்நிலை உள்ளதாலும், மேட்டூர் அணை நீர் திறப்பு குறித்து, நெடுநாளைய திட்டத்துடன் கூடிய அணுகுமுறை தேவை என்ற கருத்தும், ஒரு சிலரிடம் உள்ளது.

## கால்நடை தீவனம் சாகுபடிக்கு பால் கழிவுநீர் பள்ளிபாளையம் விவசாயிகள் ஆர்வம்

பள்ளிபாளையம்: கால்நடைகளுக்கு தேவையான சோளத்தட்டு, பசுந்தீவனம் சாகுபடி செய்வதற்கு, பால் கழிவுநீரை பயன்படுத்துவதால், செழிப்பாகவும், விரைவாகவும் வளர்வதால், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

பால் சென்டர்களில் சேகரிக்கப்படும் பாலை, டேங்கர் லாரிகள் மூலம் எடுத்துச் சென்று, பால் பண்ணைகளில் இறக்கப்படுகிறது. அதை தொடர்ந்து, அந்த டேங்கை சோப்பு ஆயில் ஊற்றி சுத்தம் செய்யப்படுகிறது. அவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீரை, பொது இடங்களில் வெளியேற்றப்படுகிறது.

இது, அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் ஒரு நடைமுறை. ஆனால், பள்ளிபாளையம் அடுத்த சின்னாரப்பாளையம் பகுதி விவசாயிகள், அந்த கழிவு நீரை, தங்களது வயல்களில் பாய்ச்சி, ஆடு, மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படும் சோளத்தட்டு, பசுந்தீவனத்துக்கு பயன்படுத்தி வருகின்றனர். அவ்வாறு கழிவுநீர் பயன்படுத்துவதால், தீவனப்பயிர் மற்றும் சோளத்தட்டு நன்கு செழிப்பாக காணப்படுவதுடன், விரைவில் வளர்ந்து, கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுகிறது. மேலும், பால், சோப்பு ஆயில் கலந்த கழிவுநீர் வயல்களில், மூன்று நாட்கள் வரை ஈரப்பதம் குறையாமல் காணப்படுகிறது.

அதனால், தண்ணீர் செலவு மிச்சப்படுகிறது. தற்போது, தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால், குடிநீருக்கே திண்டாடும் நிலையில், சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய அளவு நீர் இல்லாததால், என்ன செய்வது எனத் தெரியாமல், விவசாயிகள் விழிபிதுங்கி உள்ளனர்.

இந்நிலையில், கால்நடைகளின் உணவு தேவைக்காக சாகுபடி செய்யப்படும் சோளத்தட்டு, பசுந்தீவனத்துக்கு, பால் கழிவுநீர் பயன்படுத்துவதால், எவ்வித கவலையும் இன்றி, விவசாயிகள் உள்ளனர். பள்ளிபாளையம் யூனியன் சின்னாரப்பாளையத்தை சேர்ந்த விவசாயிகள், இத்தகைய கழிவுநீரை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:

பொதுவாக, பால் ஏற்றிச் செல்லும் டேங்கர் லாரிகள், பாலை இறக்கிய பின்,

டேங்கை சோப்பு ஆயில் போட்டு சுத்தம் செய்து வழக்கம். அவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீரை, பொது இடங்களில் வெளியேற்றி வந்தனர். அந்த கழிவுநீரை வீணாக வெளியேற்றுவதை விட, பயிர்களுக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

அதை தொடர்ந்து, லாரி டிரைவர்களை தொடர்பு கொண்டு, எங்கள் கருத்தை தெரியப்படுத்தினோம். அவர்களும், தினமும் பால் கழிவுநீரை கொண்டு வருகின்றனர். அவற்றின் மூலம் கால்நடைகளுக்கு தேவையான சோளத்தட்டு, பசுந்தீவனம் சாகுபடி செய்து வருகிறோம். தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள நிலையில், செலவில்லாமல் கால்நடை தீவனங்களுக்கு இந்த தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### வனப்பகுதியில் தீவன பயிர் சாகுபடிக்கு நடவடிக்கை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல், பென்னாகரம், பாலக்கோடு மற்றும் அரூர் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மழைகளில் யானைகள் நடமாட்டம் அதிகளவில் உள்ளது. போதிய மழையில்லாததால் யானைகள் உணவு தேடி, வன பகுதிகளில் இருந்து வனபகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் புகுந்து விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை நாசப்படுத்தி வருதுடன் பொதுமக்களையும் தாக்கி வருகிறது.

யானைகள் உணவை தேடி ஊருக்குள் புகுவதை தடுக்க கடந்தாண்டு முதல் வன பகுதிகளில் தீவனம் சாகுபடி செய்யும் திட்டம் துவங்கப்பட்டது. இந்தாண்டு பருவமழை காலத்தில் ஒகேனக்கல் உள்ளிட்ட வனபகுதிகளில் தீவனம் சாகுபடி செய்ய வனத்துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்ட வன அலுவலர் செந்தில்குமார் கூறியது:

மாவட்டத்தில் தர்மபுரி வன கோட்டத்தில், 81 ஆயிரம், அரூர் வன கோட்டத்தில்,82 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் வனங்கள் உள்ளன. இங்கு, 50க்கும் மேற்பட்ட யானைகள் உள்ளதுடன், இன பெருக்க காலத்தில், கர்நாடகா மாநிலத்தில் இருந்தும் யானைகள் தர்மபுரி மாவட்ட வனபகுதிக்கு வருகின்றன.

தமிழக வன பகுதிகளில் இருந்து யானைகள் குடிநீர், உணவுக்காக வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் புகுந்து விவசாய நிலத்தில் உள்ள பயிர்களை

சேதப்படுத்துகிறது. இதை தடுக்க வன பகுதிகளில் தீவன பயிர்களான, ஆரியம், சோளம் கம்பு,கரும்பு மற்றும் யானைகள் விரும்பி உண்ணும் மூங்கில், விலா, ஆலம், அர மரங்கள் ஆகியவை கடந்தாணடு தமிழக அரசின் உத்தரவுபடி சாகுபடி செய்யப்பட்டது. இந்தாண்டு தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து, யானகளுக்கான தீவனம் சாகுபடி செய்ய ஆரம்ப கட்ட பணிகள் செய்யப்பட்டன. ஆனால் போதிய பருவமழையில்லாததால் தீவனங்கள் சாகுபடி செய்ய முடியவில்லை. தீவனம் வளர்வதற்கு தேவையான மழை பெய்ய துவங்கியவுடன், 80 ஹெக்டேர் பரப்பளவில் யானைகளுக்கான தீவன பயிர்கள் சாகுபடி செய்யப்படவுள்ளது. இவ்வாறு கூறினார்.

### தமிழகம், கேரளாவில்முட்டை விலை 325 காசு

நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொடர் சரிவுக்கு பின் முட்டை விலை, 5 காசு ஏற்றம் கண்டுள்ளது.

நாமக்கல்லில், நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், 320 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, 5 காசு உயர்த்தி, 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 53 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், அதன் விலை, 76 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை, சென்னை, 327, பெங்களூரு, 320, மைசூரு, 320, ஐதராபாத், 295, மும்பை, 333, கா”களாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.07.2013**

**தேயிலை தோட்ட வகைகளை மாற்ற நெடா கோரிக்கை**



கவுகாத்தி : தேயிலை தோட்டங்களை 3 வகைகளாக பிரிக்க வடகிழக்கு தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம் (நெடா) கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து 'நெடா' அமைப்பின் தலைவர் பித்யானந்த் பர்காகோட்டி கூறியதாவது: சிறுதேயிலை உற்பத்தியாளர்கள், பெரிய தேயிலை தோட்டங்கள் என்று இரு வகைகளை மட்டும் பிரித்து அவற்றுக்கான திட்டங்களை அரசு அறிவிக்கிறது.

இப்போதுள்ள விதிமுறைகளின்படி, 10.12 ஹெக்டேருக்கு மேல் இருந்தால், அது பெரிய தேயிலை தோட்டங்களாக கருதப்படுகிறது. இதை மாற்றி, சிறு உற்பத்தியாளர்கள், நடுத்தர தோட்டங்கள், பெரிய தோட்டங்கள் என்று அவற்றை மாற்றி ஊக்குவிப்பு திட்டங்களை அறிவிக்க வேண்டும்.
இதன் மூலம்தான், பெரிய தோட்டங்களுக்கு ஈடாக நடுத்தர தேயிலை தோட்ட உரிமையாளர்கள் சிறப்பான பலனை அடைய முடியும்.

**பால் புரட்சியால் பரிதாப நிலை காளைகள் அழிகின்றன பசுக்கள் பெருகுகின்றன**



கோவை : தமிழகத்தில் விவசாயப் பணிகளுக்கு காளைகள் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வந்தது. ஏர் உழவு, பரப்பு அடித்தல், கிணற்று நீர் இறைப்பு, வண்டி இழுத்தல் உள்ளிட்ட விவசாயத்தின் முக்கியமான பணிகளுக்கு காளைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன. விவசாயிகளின் வாழ்வில் காளைகள் முக்கிய அம்சமாக இருந்தது.

காலப் போக்கில் விவசாயத்தில் உழவு முதல் அறுவடை வரை அனைத்து பணிகளுக்கும் நவீன ரக இயந்திரங்களின் பயன்பாடு அதிகமாகிவிட்டது. உழவு பணிக்காக அரிதாகவே காளைகள் பயன்படுத்தப்படுகின்றன. எந்த வேலையும் இல்லாததால் காளைகள் ஒதுக்கப்பட்ட இனமாக மாறிவிட்டன.

மாநில அளவில் 1.11 கோடி பசுக்களும், 15 லட்சம் காளைகளும் இருக்கின்றன. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன், பசு மாட்டிற்கு இணையாக காளைகள் இருந்தன. தற்போது மாடுகளுடன் ஒப்பிடும் போது காளைகளின் எண்ணிக்கை 5 சதவீதம் கூடம் இல்லாமல் போய் விட்டது.  ஆயுசு முடியும் நிலையில் உள்ள காளைகள் அடிமாடாக இறைச்சி கடைகளுக்கு விற்பனைக்கு அனுப்புவது அதிகமாக நடக்கிறது. சில உள்ளாட்சி அமைப்புகளில் காளை மாடுகள் குப்பை வண்டி இழுக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. அழிந்து வரும் காளைகளை காக்க, கால்நடை பராமரிப்பு துறையினரும், கால்நடை பல்கலைக் கழகத்தினரும் இதுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

மாறாக பால் உற்பத்தியை மட்டுமே பிரதானமாக கொண்டு கலப்பின காளைகளை

உருவாக்கும் முயற்சி தீவிரமாக நடக்கிறது. தற்போது மாநிலத்தில் ஜெர்சி, ஹோல்ஸ்டீன், பிரிசியன், ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் கலப்பினம், சிந்தி, காங்கயம், உம்ளாச்சேரி, பர்கூர், புலியகுளம் காளைகள் இருக்கின்றன.

கோவை, மதுரை, வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மாவட்டத்தில் கருமாற்று தொழில் நுட்பம் தீவிரமாக நடக்கிறது. இதுவரை உயர்ரக காளையில் இருந்து 241 தரமான கருக்கள் பெறப்பட்டுள்ளது. 175 பசுக்களில் கருமாற்றம் செய்து வீரியம் மிக்க, அதிக பால் தரும் பசுக்களை பெறும் முயற்சி நடக்கிறது. ஈச்சங்கோட்டை, நீலகிரி, ஒசூரில் அயலின கால்நடை பண்ணை இருக்கிறது. 117 வீரிய ரக காளைகளின் மூலமாக இங்கே கடந்த ஆண்டில் 50.90 லட்சம் உறைவிந்து உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 48.82 லட்சம் உறை விந்து உற்பத்தி செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் தொடர் மழையால் வேர்க்கடலை விதைக்க முடியாமல் ராயல சீமா விவசாயிகள் அவதி

திருப்பதி, :

ஆந்திராவில் பெய்து வரும் தொடர் மழையால் ராயலசீமா விவசாயிகள் நிலங்களில் வேர்க்கடலை விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக தொடர் மழை பெய்து வருகிறது. ராயல சீமாவிலும் நல்ல மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், ராயலசீமா பகுதியில் உள்ள சித்தூர், அனந்தபூர், கர்னூல், கடப்பா மாவட்டங்களில் விவசாயிகள் அதிகமாக வேர்க்கடலையை சாகுபடி செய்து வருகின்றனர்.

மே மாதம் முதல் ஜூலை மாதம் இறுதி வரை மழை பெய்ததும் வேர்க்கடலை விதைகளை நிலங்களில் விதைப்பது வழக்கம். இந்த ஆண்டு ஜூன் மாத இறுதி வரை மழை பெய்யாததால், 90 சதவீத விவசாயிகள் தங்களது நிலங்களில் வேர்க்கடலை விதைக்கவில்லை. இந்நிலையில், கடந்த 3 நாட்களாக தொடர் மழை பெய்தாலும், விவசாயிகள் வேர்க்கடலை விதை விதைக்க ஆர்வம் காட்டவில்லை.

கடந்த 13 நாட்களில் 64,300 ஹெக்டர் பரப்பளவில் மட்டுமே வேர்க்கடலை விதைக்கப்பட்டுள்ளது.

ராயலசீமா பகுதியில் 4 மாவட்டங்களில் 12.62 லட்சம் ஹெக்டர் நிலத்தில் வேர்க்கடலை சாகுபடி செய்கின்றனர். ஆனால் இந்தாண்டு ஜூன் 30ம் தேதி வரை 1 லட்சத்து 10 ஆயிரத்து 238 ஹெக்டரில் வேர்க்கடலை விதைக்கப்பட்டது. ஜூலை 1ம் தேதி முதல் 13ம் தேதி வரை 60 ஆயிரத்து 298 ஹெக்டரில் மட்டுமே வேர்க்கடலை விதைக்கப்பட்டது. தற்போது வரை 1 லட்சத்து 70 ஆயிரத்து 536 ஹெக்டர் நிலத்தில் வேர்க்கடலை விதைகள் விதைக்கப்பட்டுள்ளது. ஆனால் சுமார் 10 லட்சம் ஹெக்டருக்கு மேற்பட்ட நிலங்களில் வேர்க்கடலை விதைக்கப்படவில்லை.

சித்தூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 1.60 லட்சம் ஹெக்டர் நிலத்தில் வேர்க்கடலை பயிரிடுவது வழக்கம். ஆனால் இந்தாண்டு ஜூன் 30ம் தேதி வரை 67 ஆயிரம் ஹெக்டர் நிலங்களில் மட்டுமே வேர்க்கடலை விதைக்கப்பட்டுள்ளது.

அனந்தபூர் மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் சாதாரணமாக 67 மி.மீட்டர் மழை பெய்யும். ஆனால் தற்போது வரை 20.3 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இதனால் ஏராளமான விவசாயிகள் வேர்க்கடலை விதைக்கவில்லை. ஆனால் மாவட்டத்தில் உள்ள கதிரி, புக்காபட்டினம், நார்பலா, வஜ்ஜிரகரூர் ஆகிய பகுதிகளில் மட்டுமே சில விவசாயிகள் வேர்க்கடலை விதைத்துள்ளனர். இதனால் குறைவான அளவில் வேர்க்கடலை சாகுபடி நடந்துவருகிறது.

கர்னூல் மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் 117 மி.மீட்டர் பெய்யும். ஆனால் தற்போது வரை 70.7 மி.மீட்டர் மழை அதிகமாக பெய்தாலும், ஏராளமான விவசாயிகள் வேர்க்கடலை விதைக்க ஆர்வம் காட்டவில்லை. இந்த மாவட்டத்தில் பருத்தி சாகுபடிக்கு விதை விதைப்பதாக தெரிய வந்துள்ளது.

கடப்பா மாவட்டத்தில் ஜூலை மாதத்தில் 66.7 மி.மீட்டர் பெய்யும். ஆனால் தற்போது வரை 37.1 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. 1.12 லட்சம் ஹெக்டரில் சாதாரணமாக வேர்க்கடலை சாகுபடி செய்வது வழக்கம். ஆனால் இந்தாண்டு 1536 ஹெக்டர் நிலங்களில் மட்டுமே விவசாயிகள் வேர்க்கடலை விதைத்துள்ளனர்.

இந்நிலையில், கடப்பா சரக விவசாயத்துறை இணை இயக்குனர் நரசிம்மலு வெளியிட்ட அறிக்கையில், இந்த ஆண்டு ஜூலை மாதம் வரை மழை தொடரும் என்பதால், இம்மாதம் முழுவதும் வேர்க்கடலை விதைகளை விதைக்கலாம் என தெரிவித்துள்ளார்.

பாக்ஸ்

நிலங்களில் வேர்க்கடலை விதைப்பதற்கான விவரம் ஹெக்டரில்.

| மாவட்டம் | சாதாரணமாக | ஜூன் 30 வரை | ஜூலை 1&13 | மொத்தம் |
|---|---|---|---|---|
| சித்தூர் | 1.60 லட்சம் | 67000 | & | 67000 |
| அனந்தபூர் | 8.10 லட்சம் | 31000 | 21000 | 52000 |
| கர்னூல் | 1.80 லட்சம் | 11002 | 38998 | 50000 |
| கடப்பா | 1.12 லட்சம் | 1236 | 300 | 1536 |

இந்த 4 மாவட்டங்களில் மொத்தம் 12.60 லட்சம் ஹெக்டரில் வேர்க்கடலை விதைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தாண்டு ஜூன் 30 வரை 1 லட்சத்து 10 ஆயிரத்து 638 ஹெக்டரிலும், ஜூலை 13ம் தேதி வரை 60 ஆயிரத்து 298 ஹெக்டரிலும் என மொத்தம் 1 லட்சத்து 70ஆயிரத்து 536 ஹெக்டர் நிலங்களில் மிகக்குறைவாக வேர்க்கடலை விதைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆந்திர இறால்களுக்கு வெளிநாடுகளில் கடும் கிராக்கி**

சித்தூர், :

ஆந்திர இறால்களுக்கு வெளிநாடுகளில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்திய இறால்களுக்கு வெளிநாடுகளில் மவுசு ஏற்பட்டுள்ளதால், மீன்கள் மற்றும் இறால் வகைகள் பல கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதில் குறிப்பாக உயர்ரக இறால்களான பனாமி, டைகர் ரக இறால்கள் அதிகபட்சமாக ஆந்திர மாநிலத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

விசாகப்பட்டினம், குண்டூர், நெல்லூர், கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் இறால் உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இங்கிருந்து கடந்த 2011&12ம் ஆண்டில் 8 லட்சத்து 62 ஆயிரத்து 021 டன் இறால்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன்படி ரூ.16ஆயிரத்து 597 கோடி வருவாய் கிடைத்தது.

இதனை தொடர்ந்து கடந்த 2012&13 ஆண்டில் 9 லட்சத்து 28ஆயிரத்து 215 டன் இறால்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.18 ஆயிரத்து 856 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதனால் இந்த 2013&14 வருவாய் ஆண்டில் மேலும் வருவாய் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டிலேயே ஆண்டுக்கு 2 லட்சம் டன் வரை இறால் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் 1.50 லட்சம் டன் ஆந்திர மாநிலத்தில் இருந்து மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது தென் ஆசிய நாடுகள் மட்டுமின்றி அமெரிக்கா, ஜப்பான், சீனா மற்றும் பல நாடுகளில் இந்த வகை இறால்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் ஆந்திர அரசு ஏற்றுமதியை பெருக்க திட்டமிட்டு வருகிறது.

**அணைக்கட்டு பகுதியில் மணிலா, சோளம் விதைப்பு மும்முரம்**

அணைக்கட்டு, :

வேலூர் மாவட்டத்தில் நீண்ட நாட்களாக மழையில்லாததால் விவசாயிகள் பயிர்செய்யாமல் வேதனையில் இருந்தனர். இதனிடையில் அணைக்கட்டு, குடியாத்தம், வேலூர் உள்ளிட்ட பல இடங்களில் கடந்த சில நாட்களாக அடுத்தடுத்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதையடுத்து விவசாயிகள் மணிலா, சோளம், கேழ்வரகு, கம்பு, துவரை, மொச்சை, அவரை உள்ளிட்ட மானாவரி பயிர்கள் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

**வைகை அணை நாளை திறப்பு : ஜெயலலிதா உத்தரவு**

சென்னை: பாசனத்திற்காக வைகை அணையை நாளை திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள பெரியாறு பாசனப்பகுதியின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதை ஏற்று, வைகை அணையில்

இருந்து முதல் போக பாசனத்திற்கு நாளை முதல் (ஜூலை 15) தண்ணீர் திறந்து விட உத்தரவிடுகிறேன். இதனால் திண்டுக்கல் மாவட்டத்தில் 1,793 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டத்தில் 43,248 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 13 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள் ளது. இதனால் அணையில் நீர்மட்டம் 67.56 அடியாக உயர்ந்துள்ளது. தென் மேற்கு பருவ மழை தீவிரத்தால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை நிரம்பி உள்ளது. அணையில் இருந்து உபரி நீர் கடந்த 25ம் தேதி முதல் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த நீர் வருகையால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து கபினி அணைக்கு வரும் நீர் அளவை பொருத்து தினமும் ஏற்ற, இறக்கமாக நீர் வெளியேற்றப்பட்டு வருவதால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து சரிவதும், ஏறுவதுமாக உள்ளது.

இந்நிலையில், நேற்று காலை அணைக்கு 10,142 கன அடி நீர் வந்தது. இன்று மேலும் 3 ஆயிரத்து 500 கன அடி நீர்வரத்து அதிகரித்துள்ளது. இன்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 13,683 கன அடி நீர் வந்தது. அணையின் நீர் மட்டம் 67.56 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 30.64 டிஎம்சி. கடந்த மாதம் 25ம் தேதி அணையின் நீர் மட்டம் 15 அடியாக இருந்த நிலையில் நீர்வரத்து அதிகரிப்பால் 20 நாட்களில் 52 அடி அதிகமாக உயர்ந்துள்ளது.

**கர்நாடகத்தில் கனமழை பெய்தும் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து இல்லை தி.மலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் ஏமாற்றம்**

திருவண்ணாமலை: கர்நாடக மாநிலத்தில் கனமழை பெய்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையிலும், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் உயராததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாய சாகுபடிக்கு சாத்தனூர் அணை முக்கிய நீர் ஆதாரமாக அமைந்திருக்கிறது. அணையின் பாசனத்தை நம்பி, விழுப்புரம் மாவட்டத்தில் 30,537 ஏக்கர், திருவண்ணாமலை மாவட்டத்தில் 19,463 ஏக்கர் உள்பட மொத்தம் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி நடைபெறுகிறது. திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதியில் 7,543 ஏக்கர் பரப்பளவில் நடைபெறும் விவசாய சாகுபடியும் அணையின் தண்ணீரை நம்பியே உள்ளன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 40 ஏரிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 48 ஏரிகளும் சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்தால் மட்டுமே நிரம்பும் வாய்ப்புள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக சாத்தனூர் அணை நிரம்பவில்லை. அதனால், இந்த ஆண்டு நேரடி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை. ஏரிகளுக்கு மட்டுமே கடந்த மார்ச் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. சாத்தனூர் அணையின் மொத்த உயரம் 119 அடி. நீர்கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடியாகும். நேற்று மாலை நிலவரப்படி அணையில் 72.60 அடி உயரம் மட்டுமே தண்ணீர் உள்ளது.

நீர் கொள்ளளவு 995 மில்லியன் கன அடியாக உள்ளது. இது அணையின் மொத்த நீர் இருப்பில் 15 சதவீதமாகும். இந்த அளவு அணை வறண்டு போன வரலாறு இதுவரை எப்போதும் நிகழ்ந்ததில்லை.

இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் கடந்த 20 நாட்களாக தொடரும் கன மழையால், அங்குள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறும் கர்நாடக அரசு, காவிரியில் தண்ணீரை திறந்துவிட்டுள்ளது. எனவே, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

ஆனால், கர்நாடக மாநிலம் நந்திதுர்கா மலையில் இருந்து உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆற்றில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு ஒரு துளி தண்ணீரும் வந்து சேரவில்லை. எனவே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து இல்லை. கர்நாடக மாநிலத்தில் பெய்யும் கனமழையால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளம் வரும், சாத்தனூர் அணை நிரம்பும் என நம்பியிருந்த விவசாயிகள் தற்போது ஏமாற்றம் அடைந்துள்ளனர். கர்நாடக மாநிலத்தில் பெய்யும் மழையும் கைகொடுக்கவில்லையே என விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர். தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, கர்நாடக மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள அணைகள், புதிது புதிதாக கட்டப்பட்டு வரும் தடுப்பணைகளால், தமிழகத்துக்கு வரும் தண்ணீர் தடைபடுவதாக விவசாயிகள் வேதனைபடுகின்றனர்.

எனவே, இயற்கையின் கருணையால், ஆடி பட்டத்தில் பெய்யும் மழையை மட்டுமே விவசாயிகள் பெரிதாக நம்பியிருக்கின்றனர்.

பாக்ஸ்

' கர்நாடக மாநிலம் நந்திதுர்கா மலையில் இருந்து உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆற்றில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு ஒரு துளி தண்ணீரும் வந்து சேரவில்லை. எனவே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தனூர் அணைக்கு நீர்வரத்தும் இல்லை.'

## வறட்சியால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தென்னை, பனை மரங்கள் காய்ந்து அழியும் அவலம்

மொடக்குறிச்சி: ஈரோடு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. பவானிசாகர் அணை பாசனத்தில் நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய முடியாத நிலை உள்ளது. நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்துக்கு போய்விட்டதால் வறட்சி தாங்கக்கூடிய பனைமரங்கள் காய்ந்து வருகின்றன. மாவட்டம் முழுவதும் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பனைமரங்கள் காய்ந்து மொட்டையாக நிற்கின்றன.

இதேபோல, 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்களும் முற்றிலும்

காய்ந்து விட்டன. ஒரு சில விவசாயிகள் காயும் தென்னை மரங்களை விலைக்கு தண்ணீர் வாங்கி ஊற்றி காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கால்நடை தீவனம் கிடைக்காமல் ஆடு, மாடுகளை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர். கடந்த வாரங்களில் பெய்த மழையாலும் பெரியஅளவில் பலன் கிடைக்கவில்லை.
ஈரோடு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண நிதி வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நெல்லிக்குப்பத்தில் கரும்பு அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம்**

நெல்லிக்குப்பம், : நெல்லிக்குப்பம் இ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலையில் நபார்டு வங்கி மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் சார்பில் கரும்பு சாகுபடியில் சிறந்த தொழில் நுட்பத்திறன் பரவலாக்கம் பற்றி கரும்பு அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆலை பொது மேலாளர் கருணாகரன் தலைமை தாங்கினார்.
உதவி பொது மேலாளர் முரளி, உழவியல் நிபுணர் அன்புமணி, பூச்சியியல் துறை இணை பேராசிரியர் துரைசாமி முன்னிலை வகித்தனர். கரும்பு ஆராய்ச்சி பேராசிரியர் நஜிர்அகமது பயிற்சியை துவக்கி வைத்து பேசினார். நபார்டு வங்கி மாவட்ட உதவி பொது மேலாளர் ராஜகோபாலன், திண்டிவனம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலைய தலைவர் சாத்தையா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.
ஏற்பாடு களை கரும்பு பயிற்சி அலுவ லர் உதயகுமார், ஆராய்ச்சி யாளர் பழனிசாமி ஆகியோர் செய்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.07.2013**

**கூடலூர் ஒட்டாண்குளத்திற்கு 3 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் வரத்து விவசாயிகள் மகிழ்ச்சி**

கூடலூர்

கூடலூர் ஒட்டாண் குளத்திற்கு 3 ஆண்டு களுக்கு பிறகு நீர்வரத்து ஏற்பட்டு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**ஒட்டாண்குளம்**

தேனி மாவட்டம், கூடலூர் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சுரங்கனார் நீர் வீழ்ச்சி உள்ளது. மலைப் பகுதி யில் பெய்யும் மழைநீர் இங்கு நீர்வீழ்ச்சியாக கொட்டு கிறது. இந்த தண்ணீர் ஒட்டாண்குளம் என்று அழைக்கப்படும் மைத் தலை மண்ணடியான் குளத் திற்கு வந்து சேரும். இதன் மூலம் ஒட்டாண்குளம், ஈஸ் வரன் கோவில் புலம், பாரவந் தான், ஒழுகுவழி சாலை பகுதிகளில் உள்ள சுமார் 406 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்களில் இருபோகம் நெல் விவசாயம் நடைபெறுவது வழக்கம்.

அதுபோல் முல்லைப் பெரி யாற்றில் இருந்தும் வைரவன் வாய்க்கால் மூலம் கூட்டாறு வழியாக வினாடிக்கு 5 கன அடி வீதம் 10 மாதங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு இந்த குளத்திற்கு வருகிறது. ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்தில் முல்லைப் பெரி யாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இந்த தண்ணீரை பயன்படுத்தி விவ சாயிகள் முதல்போக பாசனத் திற்காக நெல் விதைக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

### 3 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர்

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சுரங்கனார் நீர்வீழ்ச்சி அருகே திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் அருவி யில் விழும் தண்ணீர் மறிக்கப் பட்டு திசைமாறி சென்றதால் குளத்திற்கு தண்ணீர் வருவது தடைபட்டது. இதன் காரணமாக இப்பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டது. ஏராளமான விளை நிலங்கள் தரிசாக மாறியது. ஒட்டாண் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை தொடர்ந்து ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ் செல்வ னின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.18 லட்சம் செலவில் 18ம் கால்வாய் அருகே தடுப்பு அணை கட்டப் பட்டு முல்லைப்பெரியாற்றில் இருந்து ஒட்டாண்குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பலனாக 3 ஆண்டு களுக்கு பிறகு தற்போது ஒட்டாண்குளத்திற்கு தண்ணீர் வரத்து ஏற்பட்டு குளம் நிரம்பி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, உற்சாகத் துடன் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர்.

இதற்கிடையே இந்த குளத்தின் கரைப்பகுதி திறந்த வெளி பார் ஆக மாறி வரு கிறது. கரைப்பகுதியில் ஏராள மான மதுபான பாட்டில்கள் சிதறி கிடக்கிறது. சிலர் மது பானம் அருந்திய ‘உற்சாகத்தில்’ பாட்டில்களை உடைத்து எறிகின்றனர். இதனால் உடைந்த மதுபான பாட்டில் கள் விவசாயிகளின் பாதங் களை பதம் பார்த்து வருகின் றன. எனவே இந்த பகுதியில் மது அருந்துவதை தடுக்க போலீசார் ரோந்து பணி மேற்கொண்டு நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.